1977 ஜூலை 15]

திரு. மா. மணிமாறன்: மின் இணைப்புத் துண்டிக்கிறபோது அங்கே இருக்கிற ப்யூஸ் காரியரைத்தான் எடுத்துவிட்டுப் போகிறார்கள். வேறு ஆக்கபூர்வமான வேலை எதுவும் இல்லை. இதற்கு 6 ரூபாய், 9 ரூபாய், 12 ரூபாய் என்று தண்டம் வசூலிப்பது, ஏற்கனவே தண்ணீர் வராமல் மிகவும் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு பாதகமாக இருக்கிறது. விவசாயத்தில் மிக அதிகமான செலவுக்கு உள்ளாகி கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு இந்தத் தண்டத் தீர்வையையாவது ஒரே சீராக ஆக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கட்டணத்தை உரிய நேரத்தில் கட்டிவிட்டால் அது கூட செலவு இல்லாமல் போய் விடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் மின்சாரக் கட்டணத்தை உரியநேரத்தில் கட்டிவிடவேண்டும் என்று சொல்வது நல்லது. ப்யூஸ்காரியரைத் தான் எடுக்கிறார்கள் என்றாலும், அதை எடுப்பதற்கு ஒரு ஆள் போக வேண்டியிருக்கிறது, திரும்ப எப்போது பணம் கட்டப்படுகிறதோ அப்போது மறுபடியும் அங்கே சென்று ப்யூஸ் காரியரைப் போடவேண்டியதாக இருக்கிறது.

(முற்பகல் 9.30)

திரு. மா. மணிமாறன்: வருமான பாக்கிகள் அதிகமாக இருக்கின்ற நேரத்தில், வசூலிப்பதற்கு அவகாசம் இருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகள் குறைவான 'பவரை' பயன் படுத்துகிற ஏழை விவசாயிகளின் கட்டணத்தைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மின் இணைப்பை வைத்து பயன்படுத்துகிறவர்கள் அவ்வளவு ஏழைகள் அல்ல. எனவே அத்தகைய உத்தேசம் இல்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜக்கமங்கலம், முட்டம், குளச்சல் வாய்க்கால்களில் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைக்காமை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. ஆதிசாமி அவர்கள் சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. இரா. ஆதிசாமி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—"கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீர்ப்பாசனத்திற்கு உட்பட்ட இரட்டைக் கரைக் கால்வாய் கடை வரம்புப் பகுதிகளான ராஜக்கமங்கலம், முட்டம், குளச்சல் வாய்க்கால்களில் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைக் காமையால் பயிர் செய்யப்பட்ட நிலங்கள் காய்ந்து போகும் நிலையிலும் உள்ளபடியால் விவசாயிகள் மிக நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலை பற்றி விவாதிக்க—"

என்னும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு அணை-1, சித்தாறு அணை 2 ஆகிய நீர்த்தேக்கங்களில் தண்ணீரின் அளவு குறைவாக இருப் பதாலும், தென்மேற்குப் பருவக் காற்றினால் ஏற்படும் மழை இப்பகுதிகளில் இல்லாததாலும் மேற்கண்ட நீர்த் தேக்கங்களில் தண்ணீர் வரண்டும் குறைவாக இருப்பதாலும் கோதையாறு பாசன ஆயக்கட்டின் வாய்க்கால்களின் முறை வைத்து பாசனநீர் சிக்கனமாக வழங்கப்படுகிறது. அதன்படி இரட்டைக் கரைக் கால்வாய் 13 ஆம் தேதி காலையிலிருந்து மூடப்பட்டு மறுபடியும் 16 ஆம் தேதி காலை திறக்கப்பட இருக்கிறது. 13 ஆம் தேதிக்கு முன்னர் இரட்டைக் கரைக் கால்வாயின் ஆயக்கட்டு பூராவும் தண்ணீர் முழுமையாக விடப்பட்டது. பயிர்கள் எல்லாம் நல்ல நிலைமையிலேயே இருக்கின்றன. நல்ல மழை பெய்து மேற்படி நீர்த்தேக்கங்களில் தண்ணீர் வரத்து அதிகமானல் முறைப்பாசன முறை கை விடப்படும்.

திரு. இரா. ஆதிசாமி: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கோதையாறு அணையில் 20 அடி மட்டத்திற்கு தண்ணீர் இருக்கிறது. ஆனல், கால்வாய்கள் செப்பனிடப்படாத தாலும், தூர் எடுக்கப்படாததாலும்தான் போதிய தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதாக அறிகிறேன். இதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தண்ணீர் இல்லாததால் தான் கால்வாயில் தண்ணீர் விடப்பட வில்லை என்பது எனக்குக் கிடைத்திருக்கிற தகவல். கால்வாய்கள் செப்பனிடப்படாததால்தான் தண்ணீர் விடப்படவில்லை என்று உறுப்பினர் கூறுகிறார். அதுபற்றி அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. ஆதிசாமி: தலைவரவர்களே, கடந்த ஆண்டு சரியான முறையில் தண்ணீர் கிடைக்காததால், 500 ஏக்கர் கரிந்து போயிருக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு அறியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் என். கிட்டப்பா, எம். அம்பிகாபதி, ஆகியோர் பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(ஈ). மாயூரம் அருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன் போக்குவரத்துப் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் விபத்துக்குள்ளானது குறித்து.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, "கடந்த 9—7—1977 அன்று மாயூரம்—சீர்காழி நெடுஞ்சாலையில் மாயூரம் நகருக்கருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்தில் பயணம் செய்த பயணிகள் விபத்துக்குள்ளாகி 10 பேருக்கு மேல் மரணமடைந்து, பலர் காயமடைந்தது குறித்து விவாதிக்க—"

என்னும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கடந்த 9—7—1977 அன்று மாயூரம்-சீர்காழி நெடுஞ்சாலையில் மாயூரம் நகருக்கருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன்